செய்தி வெளியீடு எண்:459 நாள்:16.07.2021

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (16.7.2021) முகாம் அலுவலகத்தில், ஜப்பான் நாட்டின், டோக்கியோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆற்றிய உரை.**

---

டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள தமிழ்நாட்டு வீரர்கள் அனைவருக்கும் எனது வணக்கம்!

உலகின் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியில் நீங்கள் கலந்துகொள்ள இருக்கிறீர்கள் என்பதை நினைக்கும்போதே உங்களுக்கு எத்தகைய பெருமை இருக்கிறதோ - அதேபோல் எனக்கும் பெருமையாக இருக்கிறது.

நீங்கள் அனைவரும் வெற்றி பெற்று பதக்கங்களோடுதான் தமிழ்நாட்டுக்கு வருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது!

நீங்கள் அனைவரும் ஒவ்வொரு விதத்தில் திறமைசாலிகள் என்பதை நான் அறிவேன்!

1. பவானி தேவி - வாள்சண்டை

2. சத்தியன் ஞானசேகரன் - டேபிள் டென்னிஸ்

3. சரத் கமல் - டேபிள் டென்னிஸ்

4. நேத்ரா குமணன் - பாய்மரப் படகுப் போட்டி

5. கணபதி - பாய்மரப் படகுப் போட்டி

6. வருண் - பாய்மரப் படகுப் போட்டி

7. ஆரோக்கிய ராஜீவ் - தொடர் ஓட்டம்

8. நாகநாதன் பாண்டி - தொடர் ஓட்டம்

9. தனலட்சுமி - தொடர் ஓட்டம்

10. ரேவதி வீரமணி - தொடர் ஓட்டம்

11. சுபா வெங்கடேசன் - தொடர் ஓட்டம்

12. மாரியப்பன் தங்கவேலு – மாற்றுத்திறனாளிகளுக்கான உயரம் தாண்டுதல்

- ஆகிய அனைவருமே பதக்கங்களுடன்தான் தமிழ்நாடு திரும்புவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது.

பதக்கம் வாங்கிட்டுத்தானே வருவீங்க?
என்னோட நம்பிக்கையும் மக்களோட நம்பிக்கையும் அதான்!

உங்கள் திறமை உலகம் பாராட்டும் வகையில் இருக்கிறது. வெற்றிபெற வேண்டும் என்பதற்காக விளையாடுபவர்கள் நீங்கள்! நீங்கள் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளப் போகிறீர்கள் என்பதுதான் பலருக்குத் தெரியும். ஆனால் இந்த இடத்தை அடைவதற்காக நீங்கள் இதுவரை எடுத்துக்கொண்ட பயிற்சிகள், அடைந்த துயரங்கள், வேதனைகள் அவர்களுக்குத் தெரியாது.

உங்களில் பலருக்கும் வறுமை சூழ்ந்த வாழ்க்கையாக இருந்தாலும், விளையாட்டுப் போட்டிகளின் மீது உங்களுக்கு இருந்த ஆர்வமும், உங்கள் திறமை மீது நீங்கள் வைத்திருந்த நம்பிக்கையும்தான் உங்களை இந்த உயரத்துக்கு அழைத்து வந்துள்ளது.

ஷூ வாங்குவதற்குக்கூட பணமில்லாமல்; உரிய ஊட்டச்சத்து உணவுகள் கூட கிடைக்காமல் உங்களில் சிலர் பயிற்சி பெற்று வந்துள்ளீர்கள்.

* தடகள வீராங்கனை ரேவதி வீரமணி அவர்கள் - பெற்றோரை இழந்தவர். விடுதியில் தங்கிப் படித்தவர். அவருக்கு அவருடைய பாட்டிதான் பக்கபலமாக இருந்துள்ளார். பல நேரங்களில் ஷூ கூட இல்லாமல் பயிற்சி எடுத்துள்ளார்.

* தந்தையை இழந்த தனலட்சுமி, வேலைக்குச் செல்லும் தனது அக்காவின் வருமானத்தின் மூலமாகப் பயிற்சி எடுத்துள்ளார்.

* சுபா வெங்கடேசனுக்கு அவரது தாத்தா ஊக்கமளித்துள்ளார்.

* மிகவும் வறுமையான குடும்பத்தில் இருந்து வந்தவர் நாகநாதன்.

- இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பின்னணி இருக்கிறது.

இத்தகைய பொருளாதாரத் தடைகள் இனி இல்லாதவாறு அரசு பார்த்துக் கொள்ளும். விளையாட்டில் திறமையுள்ள மாணவ மாணவியருக்கு அவர்களது வளர்ச்சிக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது.

விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறத் தேவையான பொருள்கள்,
தரமான உணவு, உறைவிடம், உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படும்.

குறிப்பாக, விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் அதிகமாக ஆர்வத்தோடு பங்கெடுக்கிறார்கள். அவர்களுக்கான முழு உதவியையும் இந்த அரசு செய்யும்.

ஆண் வீரர்களுக்குப் பொருளாதாரத் தடை மட்டும்தான் இருக்கும். பெண் வீரர்களுக்கு அத்தோடு சேர்ந்து குடும்பத் தடைகள், சமுதாயத் தடைகள் அதிகமாக இருக்கும். இந்தத் தடைகளை எல்லாம் தாண்டித்தான் ஒலிம்பிக் போட்டிகளில் பயிற்சிபெற நீங்கள் வந்துள்ளீர்கள். உங்களது திறமையைத் தமிழ்நாடு அரசு மெச்சுகிறது.

அதனால்தான் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளச் செல்லும் அனைவருக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருந்தேன். ஊக்கத்தொகை வழங்கும் விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. நானே நேரில் வழங்கினேன்.

அப்போது பேசும்போது,
ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வோருக்கு 3 கோடியும், வெள்ளிப் பதக்கம் வெல்வோருக்கு 2 கோடியும், வெண்கலப் பதக்கம் வெல்வோருக்கு 1 கோடி ரூபாயும் சிறப்புப் பரிசாக வழங்கப்படும் என அறிவித்தேன்.

இந்த அறிவிப்பின்படி, ஒலிம்பிக்கில் கலந்துகொள்ளும் அனைவரும் பதக்கம் பெற்றுவந்து இந்தத் தொகையைத் தமிழ்நாடு அரசிடம் இருந்து பெறவேண்டும் என்பதே எனது ஆசையும் விருப்பமும் ஆகும்.

டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்கவுள்ள 26 பேர் கொண்ட இந்திய தடகள அணியில், தமிழ்நாட்டில் இருந்து 5 பேர் இடம் பிடித்துள்ளனர் என்பது தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெருமை ஆகும். இந்த ஐந்து பேரும் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இன்னும் சிறப்பு. அதிலும் மூன்று பேர் பெண்கள் என்பது இன்னும் பெருமைக்குரியதாகும்.

அடுத்தடுத்து நடைபெற இருக்கும் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இன்னும் ஏராளமானவர்கள் கலந்துகொள்ளும் சூழலை அரசு ஏற்படுத்தித் தரும் என்று உறுதியளிக்கிறேன்.

உங்களுக்குப் பயிற்சி கொடுத்த பயிற்சியாளர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். உங்களது பணி என்பது மகத்தானது.

இந்த அரசு விளையாட்டுத் துறைக்கு ஊக்கமளிக்கும் அரசாக இருக்கும்.

திமுகவின் தேர்தல் அறிக்கையில் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வாக்குறுதிகளை வழங்கி உள்ளோம். அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றுவோம். விளையாட்டுத் துறைக்கு ஊக்கமளிக்கும் அரசாக எமது அரசு இருக்கும். இந்த அரசுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் நீங்கள் அனைவரும் பதக்கத்துடன் வரவேண்டும்.

அனைவரும் பதக்கம் பெற எனது வாழ்த்துக்கள்!

நன்றி வணக்கம்!

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அபூர்வ வர்மா,இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு.ரமேஷ் சந்த் மீனா,இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9